

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நேற்று (30.12.2025) பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், சாஸ்திரி நகர் 4வது சந்தில் 174வது வார்டு மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியில் ரூபாய் 10.77 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பல்நோக்கு மைய கட்டிடத்தைத் திறந்து வைத்து, குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தெற்கு வட்டாரத் துணை ஆணையாளர் அஃதாப் ரசூல், மண்டலக்குழுத் தலைவர் ஆர்.துரைராஜ், மாமன்ற உறுப்பினர் திருமதி ம.ராதிகா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அடையாறு மண்டலம் – வார்டு 174க்குட்பட்ட பகுதிகளில்

# ரூ.78.39 லட்சம் மதிப்பில் 3 பல்நோக்கு மையக் கட்டடம் - உடற்பயிற்சிக் கூடம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்!

சென்னை, டிச.31-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், அடையாறு மண்டலத்தில் வார்டு-174க்குட்பட்ட பகுதிகளில் ரூபாய் 78.39 இலட்சம் மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள 3 பல்நோக்கு மையக் கட்டத்தினையும் மற்றும் உடற் பயிற்சிக் கூடத்தையும் திறந்து வைத்தார். மேலும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், குடும்ப அட்டைதாரர்களுக்கு குறைந்த விலையிலான பொங்கல் தொகுப்பினை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சரின் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் அவர்கள், அடையாறு மண்டலத்தில் வார்டு-174க்குட்பட்ட பகுதிகளில் ரூபாய் 78.39 இலட்சம் மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள 3 பல்நோக்கு மையக் கட்டத்தினையும் மற்றும் உடற் பயிற்சிக் கூடத்தையும் நேற்று (30.12.2025) திறந்து வைத்தார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வார்டு-174க்குட்பட்ட வசந்தா பிரஸ் சாலையில், 174வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்களின் வார்டு மேம்பாட்டு நிதியின் கீழ் ரூபாய் 9.62 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பல்நோக்கு மையக் கட்டடம் மற்றும் பெசன்ட் நகர், 5வது அவென்யூவில் மாமன்ற உறுப்பினர் அவர்களின் வார்டு மேம்பாட்டு நிதியின் கீழ் ரூபாய் 16 லட்சம் மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள பல்நோக்கு மையம் கட்டடத்தினையும் திறந்து வைத்து இக்கட்டடங்களில் செயல்படும் திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்திற்குட்பட்ட அடையாறு-2, நியாய விலைக் கடை மற்றும் பெசன்ட் நகர் 4வது கடை குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அமைச்சர் அவர்கள், வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் அசன் மௌலானா அவர்களின் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூபாய் 42 லட்சம் மதிப்பீட்டில் வார்டு-174, பெசன்ட் நகர், 6வது அவன்யூவில் கட்டப்பட்ட நவீன உடற்பயிற்சி கூடத்தினைத் திறந்து வைத்துப் பார்வையிட்டு, உடற்பயிற்சி கூடத்தில் உள்ள உபகரணங்களை பயன்படுத்தி உடற்பயிற்சி மேற்கொண்டார்.

பின்னர், சாஸ்திரி நகர் 4வது சந்தில் 174வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்களின் வார்டு மேம்பாட்டு நிதியில் ரூபாய் 10.77 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பல்நோக்கு மைய கட்டிடம் திறந்து வைத்து, இக்கட்டடத்தில் செயல்படும் சாஸ்திரி நகர் 2வது நியாய விலைக் கடை குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் மற்றும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ரூபாய் 275/- என குறைந்த விலையில் பச்சரிசி, வெல்லம், முந்திரி, திராட்சை, ஏலக்காய், பாசிப்பருப்பு மற்றும் நெய் அடங்கிய பொங்கல் தொகுப்பினை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.



கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ. பரந்தாமன், வார்டு எண்.61, புதுப்பேட்டை, லப்பை தெருவில் பழுதடைந்த பழைய கழிவுநீர்க் குழாய்களை அகற்றிவிட்டுப் புதிய கழிவுநீர்க் குழாய்கள் பதிக்கும் பணிகளின் முன்னேற்றம் குறித்து சென்னைப் பெருநகரக் குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்களோடு ஆய்வு செய்தார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# "அன்னம் தரும் அமுதகரம்" 314 வது நாள்!

## அம்பத்தூர் கிழக்குப் பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை, டிச.31-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 314 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (30.12.2025), அம்பத்தூர் கிழக்கு பகுதி: 1) வட்டம் 82 அ, கள்ளிகுப்பம் ஆர்ச் அருகில், கள்ளிகுப்பம், 2) வட்டம் 82, 20B பஸ் நிலையம் அருகில், மேனாம்பேடு, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.



இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, பி.கே.மூர்த்தி.எம்.சி, எம்.டி.ஆர். நாகராஜ், டி.எஸ்.பி.ராஜகோபால் எம்.சி , டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல்.பி.எஃப். மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் என்ற நீலகண்டன் எம்.சி து.ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி அம்பத்தூர்/கிழக்கு வடக்கு/ தெற்கு/ வட்ட கழக செயலாளர்கள்: மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜயகுமார், த.வ.லால் பி.செந்தில்.வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ.ராதாகிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ.சேகர் எம்.சி, நா. நெப்போலியன், ஆர். டீக்கா, ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### நந்தனம் கி.மதி தலைமையில் துணை முதல்வர் பிறந்தநாள்!

# பள்ளி மாணவர்களுக்கு அறுசுவை உணவு!

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

சென்னை, டிச.31-

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை மேற்குப் பகுதி தி.மு.க. சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பகுதி செயலாளர் நந்தனம் மதி எம்.சி. தலைமையில் இன்று (31.12.2025 - புதன்கிழமை) மதியம் 12 மணியளவில் பக்ஸ் ரோடு சொன்னாபுரி அன்னதான சமாஜம் பள்ளி மாணவர்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த. வேலு எம்.எல்.ஏ. அறுசுவை உணவு வழங்குகிறார்.

பகுதி கழக நிர்வாகிகள் ஜி.ஆர்.ராஜேந்திரன்,ஆர்.எல். எல். வி.அசோக் குமார், பாக்கியதாஸ், அகல்யா விஸ்வநாதன், ஜி.முருகையன் முன்னிலை வகிக்கின்றனர்.

வட்ட கழக செயலாளர்கள் டி. ராஜவேலு, சீ.கிருஷ்ணமூர்த்தி, ராஜா சுரேஷ்குமார், ஆநாகராஜன், மூ.இ.ஏழுமலை, மூ ராஜேந்திரன் வரவேற்கின்றனர்.

எனவே நிகழ்ச்சியில் நம் பகுதிக்கு உட்பட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் பாக முகவர்கள் அனைவரும் கலந்து கொள்ளும்படி மயிலை மேற்கு பகுதி கழக செயலாளர் நந்தனம் மதி எம்.சி. கேட்டுக் கொள்கிறார்.



மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, வார்டு–149, பாகம் எண்.304ல், வட்ட கழக செயலாளர் த.ரமேஷ் ஏற்பாட்டில் என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி செயல் திட்ட பரப்புரை கூட்டம் நடைபெற்றது. இதில் பி.வில்சன் எம்.பி., காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். இந்நிகழ்வில் பகுதி துணை செயலாளர் வே.மதியழகன், கருஞ்சட்டை பதிப்பகம் நிறுவனர் பெல் ராஜன், செல்வி ரமேஷ் எம்.சி., மாவட்ட பிரதிநிதி ஆர்.சிவலிங்கம், தகவல் தொழில் நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர் த.பாலாஜி, பாக நிலை உறுப்பினர் (BLA2) எஸ்.பரத், BDA, BLC மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

